

# ரிவர்சபிள் பினா∴போர் டிரஸ்

*இந்த வீடியோவுல நீங்க ஒரு ரிவர்சபிள் பினா∴போர் டிரஸ் எப்படி தைக்கறதுன்னு கத்துக்கப் போறீங்க.*



## தேவைப்படும் பொருள்கள்

45 ”அகலத்துல ரெண்டு கோ-ஆர்டினேட்டிங் பிரின்ட்கள அல்லது திடமான மற்றும் பிரின்ட் காம்பினேஷன்ல 1 மீட்டர் துணி

ரிவர்சபிள் பினா∴போர் டிரஸ் டெம்ப்ளேட்-ஐ எங்க www.ushasew.com வளைதளத்திலிருந்து டவுன்லோட் செய்துக்கலாம்

தண்ணில அழியக்கூடிய மார்க்கர்

கத்தரிக்கோல்

பொருத்தமான நூல்

அப்புறம் பின்கள்



முதல்ல டெம்ப்ளேட்படி துணியை வெட்ட கத்துக்குவோம். துணியின் வெளிப்புற மற்றும் உட்புற துண்டுகளை ஒன்னா இணைக்கறது. மார்க் செய்திருக்கற எல்லா லைன்களையும் தைக்கறது. எதிர்ரெதிர் முனைகளை இணைக்கறது மூலமா நாம பின்பக்க பேட்டனை உருவாக்கி அப்புறம் தோள்பட்டைகளை தைப்போம்.

## ஸ்டெப் 1- டெம்ப்ளேட் மார்க்கிங் மற்றும் கட்டிங்




உங்களுக்குப் பிடிச்ச பிரகாசமான, நல்ல பிரின்ட் துணி எது வேணாலும் எடுத்துக்கங்க, நாங்க இந்த அருமையான பிரின்டட் துணிய பயன்படுத்தியிருக்கோம். இந்த விடியோவுக்காக இந்த பக்கத்தை வெளிப்பக்கமாவும் இதை உள்பக்கமாவும் குறிப்பிடுவோம். இப்ப ரிவர்சபிள் பினா∴போர் டிரஸ் டெம்ப்ளேட்-ஐ துணியின் வெளிப்புறமா வையுங்க. இந்த டெம்ப்ளேட் 4-5 வயசுள்ள சிறுமிக்கானது.



அதை துணி மேல வைக்கறப்ப, மடிஞ்சிருக்கற பக்கம் துணியின் மடிப்புல வைக்கப்படணுங்கறதை உறுதி செய்துக்கொங்க டெம்ப்ளேட்ல குறிப்பிட்டிருக்கற மாதிரி இதுதான் பின்பக்கம், இதுதான் முன்பக்கம். கொஞ்சம் மணிகோர்த்த பின்களால அதை சரியான இடத்தில பின் செய்யத் தொடங்குங்க. துணியின் ரெண்டு அடுக்குகள்லயும் பின் நுழையணும். இது மார்க் பண்றப்ப கூடுதல் ஸ்திரத்தன்மைய நமக்கு கொடுக்கும் இப்ப மார்க்கரை எடுத்துகிட்டு துணிமேல டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. இது முடிஞ்சதும், பின்களை நீக்கிட்டு, மார்க் பண்ண லைன்கள்ல கத்தரிக்கோலால கட் பண்ணிட்டே வாங்க. கட் பண்ணின துணி பாக்க இப்படி இருக்கணும். அடுத்து, ரிவர்சபிள் டிரஸ்-ன் இன்னொரு மெட்டீரியல கவனிக்கலாம்.





அசல் துணிக்கு மெருகு சேர்க்கற மாதிரி ஒரு துணியை எடுத்துகிட்டு அதை பாதியா மடியுங்க. இதன் வெளிப்புறமா திருப்பிட்டுதான் இதைச் செய்யணும். திரும்பவும் சொல்றோம், இதுதான் வெளிப்பக்கம் இது உள்பக்கம். இந்த துணிமேலயும் டிரஸ் டெம்ப்ளேட்ட வைப்போம். அதே செயல்பாட்டை திரும்பச் செய்யணும், டெம்ப்ளேட்ட மேல வைக்கணும், சாக் அல்லது பேனாவால மார்க் பண்ணி கட் பண்ணனும்.




## ஸ்டெப் 2 – ரெண்டு துணிகளை இணைத்தல்











ரெண்டு துணிகளையும் சரியான பக்கம் சரியான பக்கத்தை பாக்கற மாதிரி, ஒன்றின் மேல் ஒன்றா வைச்சு சரியான இடத்தில பின் பண்ணனும். இப்ப பின் செய்யப்பட்ட துணிய உங்க உஷா ஜானோம் மை ஃபேப் பார்பி தையல் மிஷினுக்கு எடுத்துட்டுப்போங்க. .தோள்களின் ஒன்ணோட விளிம்பை பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணிக்கிட்டு டயல்களை செக் பண்ணனும். பேட்டன் ஸ்டிட்ச் செலக்டாரை ஏ-ல செட் பண்ணிக்கணும், இது நேர் தையலுக்கு, அப்றம் தையல் நீளம் 2.5.ல இருக்கணும். தைக்கத் தொடங்கிருங்க, ஆரம்பத்தில் சில தையல்கள் போட்ட பிறகு தையல் பிரியாம அதே இடத்தில இருக்க ரிவர்ஸ் ஸ்டிட்ச் போட்டுட்டு தொடர்ந்து முன்னோக்கி தையுங்க. கீழ்நோக்கி தைச்சிட்டே இன்னொரு தோள்பட்டைய நோக்கி தைக்கணும், தொடர்ந்து தைக்கறப்ப பின்களை நீக்கிட்டே வரணும். முடியற இடத்துக்கு வந்ததும், அடுத்த பகுதி அதாவது கைகளுக்கான துளைகளுக்கு போகறதுக்கு முன்னால ரிவர்ஸ் ஸ்டிட்ச் போட மறக்காதீங்க. ஆனா இப்போதைக்கு தோள்பட்டைய ஓபனா விட்ருணுங்கறதை மறக்காதீங்க. தொடர்ந்து மறு முனைய நோக்கி தைச்சிட்டே போங்க. தைச்சிட்டே போகறப்ப பின்களை கவனமா நீக்கிட்டே இருக்கணும். முன்ன போலவே தோள்பட்டை பகுதியை விட்டுட்டு தைக்கத் தொடங்கிலாம், இப்ப நெக்லைனை பாக்கலாம். முழுசா தைச்சிட்டு அதை ரிவர்ஸ் தையல்போட்டு முடிச்சிருங்க. இன்னும் ஒரு பிரிவு இருக்கு. இந்த தோள்பட்டையையும் விட்டுருங்க கைத் துளைய தையுங்க. முடியற இடத்துக்கு வந்து சேர்ற வரை தொடர்ந்து தைச்சு ரிவர்ஸ் தையல்போட்டு முடிச்சிருங்க. நேர்த்தியான ஃபினிஷிங் வர அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. நாம இன்னமும் தோள்பட்டைகள தைக்கலேங்கறதை நினைவு வச்சுகண்ணும், ஆனா நெக்லைன், ரெண்டு கைகள் அப்புறம் ரிவர்சபிள் பினாஃபோர் டிரஸ்-ன் அடிப்பகுதி எல்லாம் வைச்சுக்கணும். இப்ப நாம டிரஸ்-ல ஸ்லாஷ்களை உருவாக்கணும். அடிப்பகுதியிலிருந்து தொடங்கணும் ஸ்லாஷ் பண்ணும்போது சீம்-ஐ கட் பண்ணிறக்கூடாது. அடிப்பகுதிக்குப் பிறகு, கை துளைக்கு , அதுக்கு அப்புறம் நெக்லைனுக்கு போகணும். இந்த நோட்ச்கள் துணியில வட்ட சீம்களை தட்டையாக்க உதவும், அப்பதான் உங்க குட்டி பொண்ணு இதை போட்டுக்கறப்ப அது செட்டில் ஆகியிருக்கும். அடுத்து, தைக்கப்படாத தோள்பட்டைகள்ல ஒன்றை எடுத்துக்குவோம், வீடியோல காட்டியுள்ள அதே மாதிரி துணிய திருப்பிக்கணும். இதை மென்மையா செய்யணும் அப்பதான் உங்க தையல் பிரிஞ்சு வராம இருக்கும். எல்லா மூலைகளையும் சரிசெய்து அவற்றை நேராக்கணும்.













அவை திரும்பிட்டு இல்லாம சரியா இருக்கிறதை உறுதி செய்துக்க சீம் லைன்களை நாம அயர்ன் செய்யப் போறோம். அப்படி பண்றப்ப சரிசெய்துட்டே பண்ணனும். அயர்ன் பண்ணின பக்கத்துக்கும் பண்ணாத பக்கத்துக்கும் இப்பவே வித்தியாசத்தை நீங்க பாக்கலாம்.

## ஸ்டெப் 3- ஆடையின் பின்பக்கத்தை உருவாக்குதல்










இதை செய்து முடிச்சதும், முன்பக்கம் ஓபனா உள்ள தோள்பட்டையை எடுத்து வீடியோல காட்டியிருக்கற மாதிரி பின்புற தோள்பட்டைக்கு கொண்டு வந்து முன் தோள்பட்டைய உட்புறமா ஒரு கால் அங்குலத்துக்கு மடியுங்க. இது கொஞ்சம் சிக்கலா தோணும் அதனால ரொம்ப அதிக கவனம் செலுத்தணும். முன் தோள்பட்டைய மடிச்ச பிறகு, பின் தோள்பட்டைய ஓபனிங்குல நுழைச்சு பின்பண்ணுங்க. அடுத்த பக்கத்துக்கும் இதே செயல்பாட்டை திரும்பச் செய்யணும். பின் தோள்பட்டையை முன்பக்கத்துக்கு கொண்டு வந்து முன் தோளை உட்புறமா ஒரு கால் அங்குலத்துக்கு மடிங்க. இதை நேர்த்தியா செய்யணும், அப்புறம் திறப்புக்குள்ள பின் தோளை நுழைச்சு பின் பண்ணுங்க.



நம்ப அழகான சின்ன ரிவர்சபிள் பினாஃபோர் டிரஸ் ஏறக்குறைய தயார்.இப்ப நாம பின் செய்த தோள்களை தைக்கலாம். பிரஸ்ஸர் ஃபூட்-ன் விளிம்புல தோள்பட்டைகளை அலைன் பண்ணி தைக்கத் தொடங்குங்க. தைச்சிட்டே போகறப்ப பின்களை நீக்கிட்டே வரணும், ரிவர்ஸ் தையல் போட மறக்காதீங்க. அவை ரொம்ப ரொம்ப முக்கியம். அடுத்தப் பக்கத்துக்கும் இதே செயல்பாட்டை செய்யுங்க. இதைச் செய்து முடிச்சதும், நேர்த்தியான ஃபினிஷிங் வர அதிகப்படியான நூலை கட் பண்ணிருங்க. நம்ப டிரஸ் முடிஞ்சிருச்சு! இதுதான் முன்பக்கம் இதுதான் பின்பக்கம். இதை நாம ரிவர்ஸ் பண்ணிகிட்டும் போட்டுக்கலாம். நாம கைகளை, நெக்லைனை, தோள்களை தைச்சாச்சு.



இது பாக்க எவ்வளவு அழகா இருக்கு? இந்த ரிவர்சபிள் பினாஃபோர் டிரஸ் போட்டுகிட்டு உங்க குட்டிப்பொண்ணு தேவதை போல இருப்பான்னு நாங்க உறுதியா சொல்லுவோம். இது கத்துகிறதும் ரெண்டு அவுட்ஃபிட் அப்டீங்கறதும் ஒரு நல்ல விஷயம், ஒவ்வொரு தடவையும் ஒரு புது டிரஸ் கிடைக்கும். வெவ்வேற துணிகளை வெச்சு வெவ்வேற லுக்-அ உருவாக்கி எக்ஸ்பிரிமென்ட்கூட செய்துக்கலாம்.